பகுதியில் யார் தொழில்கள் ஆரம்பிக்க முன் வந்தாலும் நாம் உதவி செய்யத் தயாராக இருக்கிறோம். உடுமலைப்பேட்டையில் கடன் கொடுத்தது என்ன ஆயிற்று என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன்.

கொசூரிலுள்ள ஐயன்குளம்

* 39. வினா—திரு. பெ. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொசூர் ஐயன் குளத்தை புதுப்பிக்கும் திட்டம் எப்போது பரிசீலனையில் எடுத்துக்கொள்ளப்பட்டது ?

(இ) வேலை எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) குளித்தலை வட்டம், கொசூர் கிராமத்தில் உள்ள ஐயன் குளத்தைப் புதுப்பிக்க 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒரு பூர்வாங்க ஆய்வை உள்ளூர் அலுவலர்கள் நடத்தினார்கள்.

(இ) இத்திட்டம் அரசின் ஒப்பளிப்பைப் பெறுவதற்கு இன்னும் அனுப்பி வைக்கப்படவில்லை. வேலை எப்போது துவங்கப்படுமென இப்பொழுது கூற இயலாது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, நம்முடைய அரசாங்கம் பொறுப்பு ஏற்ற பிறகு குளம் குட்டைகளை சீர்படுத்துவதில் பொதுப்பணித் துறை அதிக அக்கறை காட்டி வருவதற்காக நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் நில ஆர்ஜித நடவடிக்கைகள் ரெவின்யூ துறையால் தாமதமாகிற காரணத்தால் இது போன்ற பணிகள் மிக, மிக தாமதமாகின்றன. ஆகவே, அதற்காக ஒரு காலக்கெடு வைத்து நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மதிப்பீடு ரூ. 1,50,000 என்று போடப் பட்டிருக்கிறது. அதில் 89 லட்சம் ரூபாய் நில ஆர்ஜிதத்திற்காக ஆகும் என்று சொல்கிறார்கள். எனவே அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. காலக் கெடுவைத்து நடவடிக்கை எடுக்க முயற்சிக்கப்படும்.

சங்கராபுரம் தொகுதியில் முசுகுந்தா நதியின் குறுக்கே அணை

* 40. வினா—திரு. ந. நாச்சியப்பன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சங்கராபுரம் தொகுதியில் முசுகுந்தா நதியில் அணை கட்டுவதற்கு ஆய்வு செய்யப்பட்டு நீண்ட நாளாகியும் இன்னும் வேலை துவங்காததின் காரணம் என்ன ?

(இ) எப்போது வேலை துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், லக்கிநாய்க்கன்பட்டி கிராமத்தருகில் முசுகுந்தா நதியின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் கட்ட ரூ. 12.87 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளது.

(இ) அரசு ஒப்புதல் பெற்றவுடன் திட்டத்திற்கான வேலை தொடங்கப் படும்.

திரு. ந. நாச்சியப்பன்: தலைவரவர்களே, இந்தத் திட்டம் ஆரம்பித்து 5-6 ஆண்டுகள் ஆவதால் விரைவில் துவங்குவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக் கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிதி நிலையை அனுசரித்து வேலை துவங்கப்படும்.

Assistance to self-employment seekers

* 41 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Co-operation be pleased to state:

(a) whether the Co-operative Land Development Bank, Tamil Nadu has programmed to assist self-employment seekers; and மு.ப. 9-30

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) இல்லை.

(இ) இந்த வினாவிற்கு இடமில்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Is there any other State financial institution that finances or that proposes to finance the self-employment seekers within the State?

THE HON. THIRU SI. PA. ADITANAR: Sir, the nationalised banks, fourteen of them, have got......(THIRU K. M. SUBRAMANIAM: Under the control of this State). What I desired to say is this. The nationalised banks have some scheme, but if the hon. Member requires information on that, then I can secure the information from the Central Government and furnish it to him. In so far as this State is concerned, there is no such scheme in the co-operative sector.

THIRU K. M. SUBRAMANIAM: My question is, whether there is any financial institution under the control of the Tamil Nadu Government proposing to finance the self-employment scheme? Everybody knows about the nationalised banks.

THE HON. THIRU SI. PI. ADITANAR: Urban Co-operative Banks or Central Co-operative Banks are giving financial assistance to those who set up small business of their own and the amount advanced by the Urban Bank or the Central Bank is re-financed by the Industrial Development Bank of India.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, தேசியம் ஆக்கப்பட்ட பாங்குகள் பற்றிச் சொன்னார்கள். அந்த பாங்குகள் சிறு தொழில்களுக்கும், செல்ப்-எம்ப்ளாய்மெண்டுக்கும் கொடுக்கும் கடன்கள் பற்றி தமிழக அரசைக் கலந்துக் கொள்கிறார்களா? நம்முடைய அரசு ஆலோசனைகள் கொடுக் கிறார்களா? தமிழக அரசின் உதவிகள், தேசியமாக்கப்பட்ட பாங்குகளின் உதவியோடு எந்த அளவுக்கு இணைக்கப் பட்டிருக்கிறது?